# டிசம்பர் – 30 – சனி

## “கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுபவர் என்றும் நிலைத்திருப்பார்” (1யோவான் 2:17)

**முதல் வாசகம் : 1 யோவான் 2 : 12 – 17**

என் பிள்ளைகளே, அவர் பெயரால் உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டுள்ளன. எனவே உங்களுக்கு எழுதுகிறேன். தந்தையரே, தொடக்கமுதல் இருக்கும் அவரை நீங்கள் அறிந்துள்ளீர்கள். எனவே உங்களுக்கு எழுதுகிறேன். இளைஞர்களே, தீயோனை நீங்கள் வென்றுள்ளீர்கள். எனவே உங்களுக்கு எழுதுகிறேன். சிறுவரே, நீங்கள் தந்தையை அறிந்துள்ளீர்கள். எனவே உங்களுக்கு எழுதியுள்ளேன். தந்தையரே, தொடக்கமுதல் இருக்கும் அவரை நீங்கள் அறிந்துள்ளீர்கள். எனவே உங்களுக்கு எழுதியுள்ளேன் இளைஞரே, நீங்கள் வலிமை வாய்ந்தவர்கள், கடவுளின் வார்த்தை உங்களுள் நிலைத்திருக்கிறது. தீயோனை நீங்கள் வென்றுள்ளீர்கள். எனவே உங்களுக்கு எழுதியுள்ளேன். உலகின் மீதும் அதிலுள்ளவை மீதும் அன்பு செலுத்தாதீர்கள். அவ்வாறு அன்பு செலுத்துவோரிடம் தந்தையின்பால் அன்பு இராது. ஏனெனில் உலகு சார்ந்தவையான உடல் ஆசை, இச்சை நிறைந்த பார்வை, செல்வச் செருக்கு ஆகியவை தந்தையி டமிருந்து வருவன அல்ல. அவை உலகிலிருந்தே வருபவை. உலகம் மறைந்து போகிறது. அதன் தீய நாட்டங்களும் மறைந்து போகின்றன. ஆனால் கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுபவர் என்றும் நிலைத்திருப்பார்.

**பதில்பாடல்:** விண்ணுலகம் மகிழ்வதாக மண்ணுலகம் களிகூர்வதாக

**நற்செய்தி : லூக்கா 2 : 36 - 40**

அக்காலத்தில், ஆசேர் குலத்தைச் சேர்ந்த பானுவேலின் மகளாகிய அன்னா என்னும் இறைவாக்கினர் ஒருவர் இருந்தார். அவர் வயது முதிர்ந்தவர் மணமாகி ஏழு ஆண்டுகள் கணவரோடு வாழ்ந்தபின் கைம்பெண் ஆனவர் அவருக்கு வயது எண்பத்து நான்கு. அவர் கோவிலைவிட்டு நீங்காமல் நோன்பிருந்து மன்றாடி அல்லும் பகலும் திருப்பணி செய்துவந்தார். அவரும் அந்நேரத்தில் அங்கு வந்து கடவுளைப் புகழ்ந்து எருசலேமின் மீட்புக்காகக் காத்திருந்த எல்லாரிடமும் அக்குழந்தையைப்பற்றிப் பேசினார். ஆண்டவருடைய திருச்சட்டப்படி எல்லாவற்றையும் செய்துமுடித்த பின்பு அவர்கள் கலிலேயாவிலுள்ள தங்கள் ஊராகிய நாசரேத்துக்குத் திரும்பிச் சென்றார்கள். குழந்தையும் வளர்ந்து வலிமை பெற்று ஞானத்தால் நிறைந்து கடவுளுக்கு உகந்ததாய் இருந்தது.

**தியானம் :** கிறிஸ்தவ வாழ்வு என்பது இறைமகன் இயேசுவை சிந்தனை, சொல், செயல் அடிப்படையில் ஏற்று வாழ்வாக்குவதே. இன்றைய இறைவார்த்தைகள் உலக நாட்டங்களில் நமது மனதை செலுத்தாது கடவுளின் திருவுளத்தை நிறைவேற்ற ஞானத்தால் நிறைந்து கடவுளுக்கு உகந்தவர்களாக வாழ வழிகாட்டுகின்றது. கடவுளுக்கு உகந்த வாழ்வு வாழ்வென்பது மிகவும் கடினமானதொன்று. அப்படியான வாழ்வைத்தான் இன்றைய நற்செய்தியில் நாம் காணும் அன்னா என்பவர் வாழ்ந்து காட்டியுள்ளார். கைம்பெண்ணாகிய அன்னா கோவிலிலேயே இருந்த இறைபணி செய்தார். உண்ணா நோன்பிருந்தார். இறைவனைப்பற்றி பிறருக்கு பறைசாற்றினார். அவரால் கண்ணால் இறைவனைக் காண முடிந்தது. இன்று நாமும் இறையனுபவம் பெறவேண்டுமானால் அன்னாவைப்போல் உண்மையான ஆன்மீகத் தாகத்துடன் பணிபுரிய வேண்டும். பணிபுரிவது என்பது சிலருக்கு மட்டும் இறைவனால் கொடுக்கப்பட்ட அழைப்பு. அது இறைபணியாக இருக்கலாம், குடும்பப் பணிகளாகவோ அல்லது சமூகப் பணிகளாகவோ இருக்கலாம் எவ்வகைப்பணிகளாயினும் உண்மையான நேரிய தூய உள்ளத்துடனும் ஆன்மீகத் தாகத்துடனும் செய்யும்போது அங்கே இறையுணர்வை பெறமுடியும். “தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர்” (மத்.5:8) இந்த கிறிஸ்து பிறப்பு காலத்தில் இறைவன் நமக்குத்தரும் செய்தியும், அழைப்பும் நாம் தூய்மையான உள்ளத்தோராய் வாழவேண்டும் என்பதே.